# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No.840/2010 Date: 24.10.2024.

PW1-செந்தில்ராதா

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

2 ம் எதிர்மனுதாரர் சேகர் என் கணவர். நான் பயணம் செய்த TN 27 J 4635 என்ற காரின் உரிமையளார் என் கணவர் சேகர் என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு வழங்கப்பட்ட காப்பீட்டு ஆவணத்தின் படி நான் 3 ம் தரப்பினர் அல்ல என்றால் சரியல்ல. என் கணவரின் வாகனத்தில் பயணம் செய்தவர்களுக்கு காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. MCOP.No.841/2010 மனுவை என் கணவர் தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மனுவில் என் கணவர் இந்த விபத்திற்கு டிராக்டரின் ஓட்டுநர் சின்னுசாமி நாயுடு என்பவரின் கவனகுறைவு தான் காரணம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக என் கணவர் கொடுத்த புகாரின் பேரில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை தான் என்றால் சரிதான்.

4 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

நாங்கள் அவசரமாக சென்னை செல்லும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நாங்கள் பயணம் செய்த காரை ராஜா என்பவர் ஓட்டி சென்றார் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு எங்கள் காரின் ஓட்டுநர் ராஜாவின் கவனகுறைவு தான் காரணம் என்றால் சரிதான். டிராக்டர் ஓட்டுநர் அவருடைய பாதையில் சரியாக தான் வந்தார் என்றாலும் அவருடைய கவனகுறைவால் விபத்து நடைபெறவில்லை என்றால் சரிதான். அதனால் என் கணவருக்கு சொந்தமான காரின் காப்பீட்டு நிறுவனம் தான் எனக்கு இழப்பீடு செலுத்த வேண்டும் என்றால் சரிதான்.

Sd/-செந்தில்ராதா

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.